**கவனிக்க.**-20.10.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.
**கவனிக்க.**- இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2017 ஆம் ஆண்டுக்கான கொழும்பு நீதாசன வலயத்துக்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2043 - 2017 ඔක්තෝබර් මස 27 වැනි සිකුරාදා - 2017.10.27

2043 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III – காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | 152 |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள் | 152 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 154 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- பிரதேச சபைகள் (திருத்தம்) சட்டமூலம் 2017, ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

151- B81220-353(2017/10)

# காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள்

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழு

*அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணிச் சீர்திருத்த சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணிச் சீர்திருத்த சட்டத்தில் 43 ஆம் பிரிவின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட சபையான காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவரான சம்பத் சுபசிங்க ஆரச்சி ஆகிய நான், முன்னர் கூறப்பட்ட காணிச் சீர்திருத்த சட்டத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிடம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் முதலீட்டாளர்களிடமிருந்து பல்வேறு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும் வதிவிட தேவைகளின் பொருட்டும் உரிய படிவத்தில் விண்ணப்பங்கள் கோருவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக இத்தால் அறியத் தருகின்றேன்.

சம்பந்தப்பட்ட படிவங்கள் பத்தரமுல்லை, கடுவளை வீதி, இலக்கம் 475 என்ற முகவரியில் அமைந்திருக்கும் இந்த ஆணைக்குழுவின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியுமென மேலும் அறியத் தருகின்றேன்.

சம்பத் சுபசிங்ஹ ஆரச்சி,
தவிசாளர்.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழு,
இல. 475, கடுவளை வீதி,
பத்தரமுல்லை.

10-1117

---

# காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள்

*இணைப்பு 9*

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

அதிஉத்தமராம் சனாதிபதி அவர்களினால், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் பது/பிர 248 ஆம் இலக்கத்தைக் கொண்ட அளிப்பு உடுகும்பல்வெல, இலுக்வத்த எனுமிடத்தில் வசிக்கும் ஹஸ்த ஜயவீர முதியன்சேலாகே ஜயசுந்தர அல்லது பொடிமஹத்தயா என்பவருக்கு 1982.05.17 ஆந் திகதி வழங்கப்பட்டது. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இந்தப் பற்று நிலம் பதுளை மாவட்டப் பதிவாளரின் அலுவலகத்தில் எல். டீ. ஓ. 616 ஆம் இலக்கத்தின் கீழ் 1982.06.02 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ளது. இப்பற்று நிலத்திற்குச் சட்ட முறையிலான பின்னுரிமையாளர் இல்லை என்பதாலோ, அல்லது பின்னுரிமையாளர் இருந்தும், அவர் சட்ட முறையிலான பின்னுரித்து உரிமைக்கு விருப்பம் இல்லாமல் இருப்பதாலோ, பின்னுரிமையாளர் ஒருவரை நியமனம் செய்யவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் ஊவா மாகாண சபையின் எல்ல பிரதேச செயலாளர் கெபெத்துவகமகே தோன தனுக்ஷா நிலந்தி அபேவர்தன ஆகிய நான், மேலே சொல்லப்பட்ட அளிப்புப் பத்திரத்தைக் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். இந்த நடவடிக்கையை எதிர்த்து ஏதும் ஆட்சேபனை இருந்தால் அதை 2017.11.27 ஆந் திகதிக்கு முன்னதாக எனக்கு எழுத்து மூலம் அறியத் தருதல் வேண்டும்.

**அட்டவணை**

பதுளை நிருவாக மாவட்டத்தின் எல்ல பிரதேச செயலாளர் பிரிவின் கும்பல்வெல கோரளையில் உடுகும்பல்வெல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த உடுகும்பல்வெல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், பதுளை மாவட்ட அளவையாளர் என அழைக்கப்படுவதும், நில அளவையாளர் நாயகம் அவர்களினால் தயாரிக்கப்பட்டு அளவையில் அதிகார சபையின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள அ. க. பி. 27 ஆம் இலக்க களத்தாளில் 1 ஆம் இலக்க வரைபடத்தில் 308 ஆம் இலக்க துண்டு எனக் குறிப்பிடப்படுவதும் 2 றூட், 30 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் கீழ்வரும் எல்லைகளைக் கொண்டதுமான கடுகஹகந்தே பதன அரச காணி: வடக்கில் : காணித்துண்டு இலக்கம் 307; கிழக்கில்: காணித்துண்டு இலக்கம் 306, 309 ; தெற்கில் : காணித்துண்டு இலக்கம் 310 ; மேற்கில் : காணித்துண்டு இலக்கம் 427.

கே. டீ. தனுஷ்கா என். அபேவர்தன,
பிரதேச செயலாளர்,
எல்ல.

2017, யூலை 06.

10-1506

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் பிஹிலி எலேகெதர சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உபபிரிவின் கீழ், அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் 2011.10.20 ஆந் திகதி அளிக்கப்பட்ட அனு/ராஜா/பி/6387 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான ராஜாங்கனை, நிலப்பகுதி இலக்கம் 11 இல் வசிக்கும் அசோக்க நவரட்ன பியசிறி என்பவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதும் அநுராதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 7877 ஆம் இலக்கத்தின் கீழ் 2011.11.29 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளதுமான கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுக்கு சட்டரீதியான பின்னுரித்தாளராக ஒருவர் நியமிக்கப்பட்டிருக்காமை அல்லது உரிமைக்காரர் ஒருவர் உள்ள போதும் அவர் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்மை காரணமாக பின்னுரித்துக்காரர் ஒருவர் நியமிக்கப்படாதுள்ளபோது குறித்த அளிப்பினை மேற்சொன்ன சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பான ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2017.11.27 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

### அட்டவணை

*அநுராதபுரம் நிருவாக மாவட்டத்தில், ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவில், விலச்சிய தெற்கு கோரளையில் இல. 453 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பகுதியில் உள்ள நிலப்பரப்பு II எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு அநுராதபுரம் மாவட்ட நில அளவையாளர் கண்காணிப்பாளர் அவர்களின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள இ. கு. வ. இ. 16 ஆம் இலக்க வரைபடத்தில் 400 ஆம் இலக்க காணித்துண்டு எனக் குறிப்பிடப்படுவதும் 00ஏக்கர், 01 றூட், 22 பேர்ச் பரப்பளவுள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச மேட்டுக் காணித்துண்டு - வடக்கில் : காணித்துண்டு இலக்கம் 358 பாதைக்கான ஒதுக்கப்பகுதி மற்றும் காணித்துண்டு இலக்கம் 399; கிழக்கில்: காணித்துண்டு இலக்கம் 399 மற்றும் காணித்துண்ட இலக்கம் 401 ; தெற்கில் : காணித்துண்டு இலக்கம் 401 மற்றும் காணித்துண்டு இலக்கம் 409 ; மேற்கில் : காணித்துண்டு இலக்கம் 409 பாதைக்கான ஒதுக்கப்பகுதி மற்றும் காணித்துண்டு இலக்கம் 358 பாதைக்கான ஒதுக்கப்பகுதி.*

*பி. ஜீ. சுனில் அபேகோன்,*
*பிரதேச செயலாளர்,*
*ராஜாங்கனை.*

*2017, செத்தெம்பர் 8.*

*10-1507/1*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் பிஹிலி எலேகெதர சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உபபிரிவின் கீழ், அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1994.08.15 ஆந் திகதி அளிக்கப்பட்ட அனு/ராஜா/பிர/708 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான யாய 12, இராஜாங்கனையில் வசிக்கும் திரு. அத்தநாயக்க முதலிகே பொடி அப்புஹாமி என்பவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதும் அநுராதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 145 ஆம் இலக்கத்தின் கீழ் 1995.01.23 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்கு பின்னுரித்தாளராக்குவதற்கு சட்டரீதியாக ஒருவர் இல்லாமை அல்லது பின்னுரித்தாளராக குறிப்பிட்ட நபர் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்மை காரணமாக பின்னுரித்துக்காரர் ஒருவர் நியமிக்கப்படாதுள்ளபோது குறித்த அளிப்பினை மேற்சொன்ன சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பான ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2017.11.27 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

### அட்டவணை

*அநுராதபுரம் நிருவாக மாவட்டத்தில், ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவில், விலச்சிய தெற்கு கோரளையில் இல. 454 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பகுதியில் யாய 12 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு அவர்களின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள 1 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் இ. கா. வ. இ. (ஏ.ஜ.ஸி.ஏ.) 14 ஆம் இலக்க வரைப்படத்தில் 201 ஆம் இலக்க காணித்துண்டு எனக் குறிப்பிடப்படுவதும் 02 ஏக்கர், 01றூட், 03 பேர்ச் பரப்பளவுள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு - வடக்கில் : 90 ஆம் இலக்க அருவி மற்றும் பாதுகாக்கப்பட்ட வீதி; கிழக்கில்: 90 ஆம் இலக்க காணித்துண்டு ; தெற்கில் : 194 ஆம் இலக்க தியவன்னாவை குளம் ; மேற்கில் : 72 ஆம் இலக்க அரச காணி.*

*பி. ஜீ. சுனில் அபேகோன்,*
*பிரதேச செயலாளர்,*
*ராஜாங்கனை.*

*2017, செத்தெம்பர் 8.*

*10-1507/2*

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின்
இல. : 4/10/25996
மாகாணக் காணி ஆணையாளாரின்
இல. :- EP/28/LES/BAT/MN/287

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 172 பீ, திருச்செந்தூர் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த திருச்செந்தூர் எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் பிபிமட 2112 ஆம் இலக்க சுவடு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.0335 ஹெக்டேயர் விஸ்தீரமுள்ளது மான அரச காணியை வதிவிடம் அமைக்கும் நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தறுமாறு கேட்டுத் சுகந்தமலர் இராசமணிக்கம் என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப் படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு

வடக்கு : பிபிமட 72 இல் காணித்துண்டு இலக்கம் 47;
கிழக்கு : பிபிமட 72 இல் காணித்துண்டு இலக்கங்கள் 47 மற்றும் 48;
தெற்கு : பிபிமட 72 இல் காணித்துண்டு இலக்கங்கள் 48 மற்றும் 47;
மேற்கு : பிபிமட 72 இல் காணித்துண்டு இலக்கம் 47.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.-** முப்பது வருடங்கள் (30) (1995.06.15 தொடக்கம் 2025.06.14 வரை);

**வருடாந்தக் குத்தகை.-** பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடு செய்யப்பட்ட 1995 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்;

தண்டப்பணம் .- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% வீதத்தின் மூன்று மடங்கு செலுத்தப்பட வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப் படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங் களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனை கட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்ததகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2017.05.15 ஆந் தினத்திலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் கீழ்க்குத்த கைக்கு விடுதல் அனுமதிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காககொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கதக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

ஜி. பிரணவன்,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6 ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2017, ஒற்றோபர் 27.

10 – 689

---

காணி ஆணையாளர் நாயகத்தின்
இல. : 4/10/51309
மாகாணக்காணி ஆணையாளாரின்
இல. : NP/28/0402/SLQ/42/1199

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மன்னார் மாவட்டம், மன்னார் நகரம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திருகேதீஸ்வரம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த

திருகேதீஸ்வரம் எனும் கிராமத்தில் அமைந்துள்ள வரைபடத்தில் 03றூட் , 26 பேர்ச்சஸ் விஸ்தீரமுள்ளதுமான அரச காணியை சிறுவர் இல்லம் ஸ்தாபிக்கும் நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தறுமாறு கேட்டு சிவன் அருள் இல்ல நிருவாக சபையின் தலைவரான திரு. நமசிவம் சிவயோகராஜா, செயலாளரான திருமதி குருபரன் இந்து பிரியதர்ஷனி, பொருளாளரான திரு. கணபதிப்பிள்ளை திரு. நாவுக்கரசு ஆகியோர் விண்ணப்பித் துள்ளனர் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:-

வடக்கு : பாதை;
கிழக்கு : பாதை;
தெற்கு : பாதை;
மேற்கு : சிவன் அருள் இல்லம்.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2017.08.09 தொடக்கம் முன்னோக்கி);

**வருடாந்தக் குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடு செய்யப்பட்ட 2017 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 1/ 2% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்;

தண்டப்பணம் .- இல்லை;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி சிறுவர் இல்லம் ஸ்தாபிக்கம் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்ப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்ததகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2017.08.09 ஆந் தினத்திலிருந்து குறைந்தது 5 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் கீழ்க்குத்தகைக்கு விடுதல் அனுமதிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காககொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கதக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டீ.ரீ. எம். ஜயதிலக,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
''மிஹிகத மெதுர'',
காணிச் செயலகம்,
இல. 1200/6 ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2017, செத்தெம்பர் 26.

10 - 1034

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.